**மண்முனைப் பாலம் நிர்மாணச் செயற்திட்டம் - 2013**

மண்முனைப் பாலம் நிர்மாணச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 செப்தெம்பர் 13 ஆம் திகதிய 1160700 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன**

மண்முனைப் பாலம் நிர்மாணச் செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின்படி, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மண்முனை வாவியின் மேற்கு மற்றும் கிழக்கு கரையை இணைப்பதற்காக பாலம் ஒன்றினை நிர்மாணிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஜப்பான் யென் 1,206 மில்லியனாகும். செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2012 யூன் 29 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2014 மே 15 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கொடையளிக்கும் முகவர்கள் என்போரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், மானியம் முதலியவைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) மானியத்தின் கீழ் செய்யப்பட்ட பற்றுதல்கள் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுடன் இணங்கியதாக இருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங் காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

---------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா. 801,866,055 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் முடியடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் ரூபா 1,199,098,742 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், 2012 ஆம் ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினத்தின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டடுகிறது.

| செலவினத்தின் வகை | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம். |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 29,868 | - | 29,868 |
| நிர்மாணக் கிரயம் | 699,843,856 | 335,653,321 | 1,035,497,177 |
| ஆலோசனைக் கட்டணம் | 85,456,642 | 61,402,392 | 146,859,034 |
| செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுச் செலவினம் | 16,535,689 | 176,974 | 16,712,663 |
| மொத்தம் | 801,866,055 | 397,232,687 | 1,199,098,742 |

## 5. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் தொடர்பான குறித்த சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | முதலாவது மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய தொகைகள் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஜப்பான் யென் (மில்) | ரூபா. (மில்) | ரூபா. (மில்) | ஜப்பான் யென் (மில்) | ரூபா. (மில்) | ஜப்பான் யென் (மில்) | ரூபா. (மில்) |
| மானியம் | 1,206 | 1,865 | 850,982 | 357,704 | 463,291 | 506,784 | 850,982 |
| இலங்கை அரசாங்கம் | - | 397 | 25,606 | - | 25,606 | - | 25,606 |
| மொத்தம் | 1,206 | 2,262 | 876,588 | 357,704 | 488,978 | 596,784 | * 876,588 |

* முற்பணங்கள் மற்றும் அட்டுறு செலவினம் என்பவற்றை தவிர்த்தமை காரணமாக இந்த அறிக்கையின் பந்தி 4.1 இல் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து இத்தொகை வித்தியாசப்படுகின்றது.

**5.2. பௌதீக செயலாற்றல்**

-------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மண்முனை பாலத்திற்கு இடையில் வீதி விளக்கினை பொருத்துவதற்கு மிகவும் அவசியம் உள்ள போதிலும் வீதி விளக்கிடல் முறைமை வழங்குவதற்காக அளவீட்டுப் பட்டியலில் எவ்வித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. பின்னர், செயற்திட்டமானது தேவையை தெரிவித்திருந்ததுடன் நிர்மாண வேலைகள் பூர்தியான பின்னர் இது தொடர்பில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் நிதிகளை பயன்படுத்தி முற்பணமாக ரூபா 1,174,864 தொகை செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டமானது ஆரம்ப கட்டத்தில் இத்தேவை இனங்காணப்பட்டிருக்கையில் கொடையளிக்கும் முகவருக்கு திருப்பப்பட்டிருந்த ரூபா 324,722,028 தொகையான பயன்படுத்தப்படாத நிதி மீதி இந்த நோக்கத்திற்காக பயன்படுத்த முடிந்திருக்கும்.

(ஆ) மண்முனையில் உயர்ந்த வெள்ள மட்டம் (எச்எவ்எல்) அவற்றின் மீது தனித்தனியாக சாத்திய வளக் கற்கை அறிக்கை மேற்கொள்ளாமல் கல்லடி பாலத்தின் நிர்மாணத்திற்காக கருத்திற்கொள்ளப்பட்ட உயர்ந்த வெள்ளமட்டத்தின் அடிப்படையில் மண்முனைப் பாலத்தின் நிர்மாணத்திற்காக 1.42 மீற்றர்களாக கருத்திற்கொள்ளப்பட்டது. பின்னர், 2012 இல் மண்முனையில் எதிர்பார்க்கப்பட்டு வெள்ளத்தின் படி, 1.60 மீற்றர்கள் உயர்ந்த வெள்ள மட்டம் வெளிப்பட்டிருந்தது என அறிக்கையிடப்பட்டிருந்தது. இதன்படி, எதிர்காலத்தின் வெள்ள பருவகாலத்தின் போது முழுப்பாலத்தின் மூழ்கும் சாத்தியத் தன்மை கணக்காய்வில் நிர்ணயிக்க முடியாதிருந்தது. இதுதொடர்பில், செயற்திட்ட பணிப்பாளர் ஏற்படுகின்ற உயர்ந்த வெள்ள மட்டம் தடுப்பதற்காக பாலத்தின் நிர்மாணம் சிக்கனமாக செய்யப்பட்டிருக்கவில்லை என அறிவித்திருந்தார்.